சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – புதுக்கோட்டை மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான திரு.மா.தனபால், அலுவலக உதவியாளர் என்பவரின் மகன் திரு.த.பாலமுரளி, இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ-5) துறை

அரசாணை (3ப) எண்.44

நாள் 01.09.2022.
சுபகிருது, ஆவணி 16.
திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்: 23.01.2020.
2. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.ப2/6801/2019(வளர்ச்சி), நாள்: 08.12.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.55886/2021/டி2, நாள்: 31.03.2022.

*****

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில், புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், மணமேல்குடி ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து 20.03.2018 அன்று பணியிடைக்காலமான திரு.மா.தனபால் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.த.பாலமுரளி என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட

..2

Scanned with CamScanner

செயல்முறையின்படி கருணை அடிப்படையில், புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 09.12.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. மேலும், மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் நிறைவு செய்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.த.பாலமுரளி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 31.10.2019 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 28.06.1986 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 33 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.த.பாலமுரளி என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தனியரின் பணியினை இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 09.12.2020 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.



Scanned with CamScanner

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 26.05.2022-ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.9838/ட்டி.1/2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.2513514/ஜி1/2022, நாள்: 23.06.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை மாவட்டம்.
திரு.த.பாலமுரளி, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, புதுக்கோட்டை மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை மாவட்டம்)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், புதுக்கோட்டை மாவட்டம்.

**நகல்:**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Scanned with CamScanner

ந.க.எண் 6801/2019/பச (வ1)
நாள்:   10.2022

மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி)
புதுக்கோட்டை.

(அரசாணை சார்பு செய்யப்படுகிறது)

பெறுநர்
திரு. கு. பாலமுருகன்
இளநிலை உதவியாளர்
ஊராட்சி ஒன்றியம்
அரிமளம் (உரிய உத்திரவுக்கு)

Personal Assistant to Collector
(Development) PUDUKKOTTAI.
14/10/22

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)/(வ.ஊ) ஊ.ஒ. அரிமளம்

மே.கு.எண் 10010/2020/அ1
நாள் 22.11.2022

ஊராட்சி ஒன்றியம்
அரிமளம்

அரசாணையினை தொடர்புடையவருக்கு சார்பு செய்யப்படுகிறது.

Block Development Officer
(Block Panchayat)
Panchayat Union, Arimalam
R.E. 412

22.11.2022

பெறுநர்
திரு. கு. பாலமுருகன்
இளநிலை உதவியாளர்
ஊராட்சி ஒன்றியம்
அரிமளம்.

Scanned with CamScanner